


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.2.2025) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் நடைபெற்ற தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாடு 3.0ல், சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்விற்கான அறிஞர் அண்ணா விருது, சுற்றுச்சூழல் சுடரொளி விருது, சுற்றுச்சூழல் செயல்வீரர் விருது, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்கான தனிநபர்களுக்கான கர்மவீரர் காமராசர் விருது, சுற்றுச்சூழல் புரவலர் விருது, சுற்றுச்சூழல் செயல்வீரர் விருது மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்கான நிறுவனத்திற்கான டாக்டர் குருசாமி முதலியார் விருது, சுற்றுச்சூழல் காவலர் விருது, சுற்றுச்சூழல் செயல்வீரர் விருது ஆகிய விருதுகளை விருதாளர்களுக்கு வழங்கி சிறப்பித்தார். இந்த மாநாட்டில் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகரராஜா, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.செந்தில் குமார், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை இயக்குநர் ஏ.ஆர்.ராகுல்நாத், தமிழ்நாடு காலநிலை மாற்ற நிர்வாகக் குழுவின் உறுப்பினர்கள் எரிக் சொல்ஹெய்ம், டாக்டர் சவுமியா சுவாமிநாதன், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் தலைவர் திருமதி ஜெயந்தி, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் ஸ்ரீநிவாஸ் ஆர்.ரெட்டி, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (ஆராய்ச்சி) செல்வி மிதா பானர்ஜி, தலைமை வன உயிரின காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.2.2025) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், அவசரகால ஊர்தி சேவைகளை மேலும் செம்மையாக செயல்படுத்தும் வகையில், 72 புதிய "108" அவசரகால ஊர்திகள், மலை மற்றும் நிலப்பரப்பு பகுதிகளுக்கான 4 புதிய நான்கு சக்கர அவசரகால ஊர்திகள், 31 புதிய இலவச அமரர் ஊர்திகள் மற்றும் 36 புதிய இலவச தாய்–சேய் நல ஊர்திகள், என மொத்தம் 29 கோடியே 15 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய் செலவில் 143 ஊர்திகளின் சேவைகளையும், தமிழக கேபிள் டிவி கம்யூனிகேஷன் லிமிடெட் நிறுவனத்தின் சார்பில் 1 கோடியே 12 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் மதிப்பில் மருத்துவ உபகரணங்களுடன் கூடிய 4 புதிய அவசர கால ஊர்திகளின் சேவைகளையும் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் அருண் தம்புராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### விழுப்புரம் வருகை: பாதை எல்லாம் பாசக் குரல்கள்! வீதிஎல்லாம் நேச அழைப்புகள்!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நெஞ்சார்ந்த நன்றி!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!

விழுப்புரம், பிப்.5 -

விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் கௌதம சிகாமணி அறிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



பொறுப்பிற்கு புதியவன் இந்த எளியவனை "உங்களில் ஒருவன்" நான் என தாயுள்ளத்தோடு வாழ்த்திய கழக குடும் பத்தின் தலைவரே தமிழகத்தின் முதல்வரே

என்றென்றும் நன்றியுடன் நான் இருப்பேன் உங்கள் கட்டளைக்கு செயலாற்ற காத்திருப்பேன் இந்திய நாட்டையே திரும்பி பார்க்க வைக்கும் வியப்புமிகு வியர்வைத் துளிகளுக்கும் தமிழ் நாட்டை முன்னேறிய நாடுகளுக்கு இணையாக உயர்த்துகின்ற தன்னேரில்லா விடாமுயற்சிக்கும் ஒளிரும் சான்றான உங்களிடம் யான் பெற்ற பாராட்டு கிடைத்தற்கரிய நற்பேறு ஆகும்.

விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் திரண்ட வாக்குகளும் விழுப்புரத்தின் மணிமண்டப திறப்பு விழாக்களில் சாலையின் இருபுறமும் சமுத்திரமே வந்ததைப் போன்ற கூட்டமும் தங்களின் தன்னிகரற்ற ஆட்சிக்கு கிடைத்த அத்தாட்சிகள்.

எழுப்பிய வாழ்த்தொலிகள் துணை முதல்வரின் துடிப்புமிகு தொண்டுக்கு கிடைத்த எதிரொலிகள் வாய்ப்பு அளித்தமைக்கு வாழ்நாள் முழுவதும் உழைத்தே தேய்வேன் நீங்கள் இடும் ஆணையினை இமைக்கொட்டும் நேரத்தில் செய்துக்காட்ட கலைஞரின் மொழியாக பாய்வேன் இந்திய அரசியலில் தீராத பெருமை MKS. உங்களின் வற்றாத புகழுக்கு காரணம் MKS (Militancy , Kindness , Sacrifice )

எங்கள் தலைவரே !! விழுப்புரத்துக்கு நீங்கள் வந்தபொழுது பாதை எல்லாம் பாசக் குரல்கள் வீதி எல்லாம் நேச அழைப்புகள் உங்களுக்கு எழுப்பிய வாழ்த்தொலிகள் வான் வெளியிலேயே எதிரொலிக்கும் முரசொலிகள் உங்கள் பாராட்டு ஆயிரம் குளுகோஸ் பாட்டில்கள் லட்சம் வைட்டமின் மாத்திரைகள் எங்களுக்கு நாள்கள் இருப்பதே உங்கள் சுட்டுவிரல் திசையில் மக்களுக்கு உழைப்பதற்கே எங்களுக்கு தோள்கள் இருப்பதே... முதல்வரே !!

உங்களையும் இயக்கத்தையும் சுமப்பதற்கே நீங்கள் அகமகிழ்ந்து பொழிந்திட்ட அத்துனை வாழ்த்துகளையும் என்னோடு உழைத்திட்ட முத்தமிழ் அறிஞர் நம் கலைஞர் அவர்களின் உணர்வோடு கலந்திட்ட விழுப்புரம் மாவட்டத்து உடன்பிறப்புகள் அனைவருக்கும் அப்படியே சமர்பித்து நெஞ்சார மகிழ்கின்றேன் கொடையாக பெரும்பொறுப்பை அளித்தவரே படையாக என்றும் இருப்போம் நாளெல்லாம் பொழுதெல்லாம் நன்றியோடு எப்பொழுதும் தங்கள் கட்டளைக்கு காத்திருப்பேன்!

இவ்வாறு டாக்டர் பொன்.கௌதம சிகாமணி கூறியுள்ளார்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# பேரறிஞர் அண்ணா 56 வது நினைவு நாள் அமைதிப் பேரணி!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது!

கன்னியாகுமரி, பிப். 5 -

காஞ்சி தந்த காவியத் தலைவர், தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும், வாழ்நாளெல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர், தென்னகத்தின் மிகப்பெரும் அரசியல் தலைவர்,

பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாள் அமைதி பேரணியானது கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் தலைமையில், நாகர்கோவில் மாநகரச் செயலாளர் ப.ஆனந்த் முன்னிலையில் 03.02.2025, திங்கட்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகம் முன்பிலிருந்து துவங்கி நாகர்கோவில், ஒழுகினசேரி வழியாக சென்று வடசேரியில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலை அருகே பேரணி நிறைவுற்று அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்வில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் எப்.எம். இராஜரத்தினம், மாநில மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், மாநில தணிக்கைக்குழு உறுப்பினர் என். சுரேஷ்ராஜன், அயலக அணி மாநில துணைச் செயலாளர் பாபு வினிபிரட், வர்த்தகர் அணி இணைச் செயலாளர் என். தாமரைபாரதி, மாவட்ட பொருளாளர் கேட்சன் உட்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உறுப்பினர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



கடலூர் கிழக்கு மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி பேரூர், இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களின், அறிமுக கூட்டம், கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் – வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில், வடலூர் மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக், கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, சமூக வலைதள பயிற்சியாளர் இளமாறன், கழக தேர்தல் பணிக்குழுச் செயலாளர் இள.புகழேந்தி, கழக பொறியாளர் அணி தலைவர் துரை.கி.சரவணன், கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., மேயர் சுந்தரிராஜா, மாவட்டக் கழக துணைச் செயலாளர்பள் ஞானமுத்து, சக்திவேல், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜி.கார்த்திகேயன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அவதூறு செய்தி வெளியிட்ட ஜூனியர் விகடன்

# டி.ஆர்.பாலுவுக்கு ரூ.25 லட்சம் நஷ்டஈடு வழங்கவேண்டும்!

## சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, பிப். 5 -

அவதூறு செய்தி வெளியிட்டதற்காக ஜூனியர் விகடன் வார இதழ், மக்களவை கழகக் குழுத் தலைவரும், கழகப் பொருளாளருமான டி.ஆர்.பாலு அவர்களுக்கு 25 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்குமாறு சென்னை உயர்நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2012ம் ஆண்டு ஜூனியர் விகடன் வார இதழின் கேள்வி - பதில் பகுதியில் சேது சமுத்திரத் திட்டத்தில் முறைகேட்டில் ஈடுபட்டதாகவும், தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் ராகுல் காந்திக்கு எதிராக பேசியதாகவும் டி.ஆர்.பாலு எம்.பி. குறித்து அவதூறு செய்தி வெளி யிடப்பட்டது.



ஜூனியர் விகடன் இதழுக்கு எதிராக முன்னாள் ஒன்றிய அமைச்சரும், திருபெரும்புதூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, கடந்த 2014-ஆம் ஆண்டு மான நஷ்டஈடு வழக்கு தாக்கல் செய்திருந்தார். மனுவில், தனது நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் உள்நோக்கத்தோடு செய்தி வெளியிடப்பட்டதாகவும், இந்த செய்திகள் முழுக்க அவதூறுசெய்திஎனவும், ஆதாரமற்றவை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

மேலும், தன்னைப் பற்றியோ தனது குடும்பத்தினரை பற்றியோ செய்திகளை வெளியிட ஜூனியர் விகடனுக்கு தடை விதிக்க வேண்டும் என்றும் ஒரு கோடி ரூபாய் இழப்பீடு வழங்க உத்தரவிட வேண்டும் என்றும் கோரியிருந்தார். இந்த வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், டி.ஆர்.பாலு தொடர்பான செய்திகள் வெளியிட ஜூனியர் விகடன் வார இதழுக்கு தடை விதித்து உத்தரவிட்டிருந்தது.

இதனையடுத்து, இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது நீதிபதி நக்கீரன், டி.ஆர்.பாலுவுக்கு மான நஷ்ட ஈடாக 25 லட்சம் ரூபாய் வழங்க வேண்டும் என்று ஜூனியர் விகடன் வார இதழுக்கு உத்தரவிட்டு, வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டார்.

# நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த ஒன்றிய அரசுக்கு கண்டனம்!

## ஒன்றிய அரசைக் கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம்!

சென்னை, பிப். 5 -

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டிற்கு எந்தவிதமான நிதி ஒதுக்கப்படாததைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பிப்ரவரி 1ம் தேதி ஒன்றிய நிதிநிலை அறிக்கையை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார்.

இதில் தமிழ்நாட்டில் எந்த ஒரு திட்டத்திற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

மேலும் ஏழை எளிய நடுத்தர மக்களை பாதிக்க கூடிய வகையில் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதனைக் கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மாநிலம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னை, அமைந்தகரையில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் சண்முகம் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில், ஒன்றிய அரசின் பட்ஜெட்டை எதிர்த்தும், கூட்டாட்சி கோட்பாட்டை சிதைக்கும் செயல்களை கண்டித்தும் முழக்கங்களை எழுப்பினர்.

**சென்னை - அடையாறு**

இதேபோல், அடையாறு எல்.பி.ரோடு சிக்னல் அருகே மார்க்சிஸ்ட் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அக்கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் ஜி.ராமகிருஷ்ணன் சிறப்பு அழைப்பாளராக கலந்துக் கொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பி கண்டன உரையாற்றினார்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 56–வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாள் அமைதி பேரணி மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில், நாகர்கோவில் மாநகரச் செயலாளர் ப.ஆனந்த் முன்னிலையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகம் முன்பிலிருந்து துவங்கி நாகர்கோவில், ஒழுகினசேரி வழியாகச் சென்று வடசேரியில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலை அருகே பேரணி நிறைவுற்று அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் எப்.எம். இராஜரத்தினம், ஹெலன் டேவிட்சன், என்.சுரேஷ்ராஜன், பாபு வினிபிரட், என்.தாமரைபாரதி, கேட்சன் உட்பட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உறுப்பினர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.